**செய்தி வெளியீடு எண்: 03/2021** **நாள்: 18.12.2021**

## பத்திரிக்கைச் செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் மெல்லிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று 18.12.2021 முதல் மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் பல்சுவை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை” கலை குழுவுடன் இணைந்து இன்று 18.12.2021 (சனிக்கிழமை) 14 மெட்ரோ இரயில் நிலையங்கள் (தெரு நிலை) மற்றும் மெட்ரோ இரயில்களில் மெல்லிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து நாளை 19.12.2021 (ஞாயிற்றுக்கிழமை) “ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை” கலை குழுவின் மெல்லிசை நிகழ்ச்சி விம்கோ நகர் மெட்ரோ (மதியம் 2.30 – 3.30), வண்ணாரப்பேட்டை மெட்ரோ (காலை 10.30 – 11.30), உயர் நீதிமன்ற மெட்ரோ (நண்பகல் 12.30 – 1.30), எல்.ஐ.சி (நண்பகல் 12 – 1), ஆயிரம் விளக்கு மெட்ரோ (காலை 10.30 – 11.30), கிண்டி மெட்ரோ (மதியம் – 2 – 3), விமான நிலையம் மெட்ரோ, திருமங்கலம் மெட்ரோ (காலை 10.30 – 11.30 மற்றும் மதியம் 2.30 – 3.30), கோயம்பேடு மெட்ரோ (நண்பகல் 12 – 1), வடபழனி மெட்ரோ (மதியம் 12.30 – 1.30 மற்றும் மதியம் 2 – 3), அசோக் நகர் மெட்ரோ (காலை 10.30 – 11.30), ஆலந்தூர் மெட்ரோ (மாலை 4 – 5), சென்ட்ரல் மெட்ரோ (காலை 9 – 10 மற்றும் மாலை 4 – 5), பரங்கிமலை மெட்ரோ (காலை 9 – 10) ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்கள் (தெரு நிலை) மற்றும் மெட்ரோ இரயில்களில் (விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரை (மாலை 4 – 5), விமான நிலையம் முதல் விம்கோ நகர் வரை (காலை 9 – 10), சென்ட்ரல் முதல் பரங்கிமலை மெட்ரோ வரை (மாலை 4 – 5), பரங்கிமலை முதல் சென்ட்ரல் மெட்ரோ வரை (காலை 9 – 10)) மெல்லிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து நாளை 19.12.2021 (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணி முதல் 8 மணி வரை வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் (தெரு நிலை) பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெறுகிறது

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**